**S.T.C No.46/2023**

**Dated: 07.08.2024**

**PW: 1** மாரியப்பன்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் 8ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருவீர்கள் என்றால் வாழைக்காய் வியாபாரம் செய்து வருகிறேன். வேறு ஏதேனும் உபதொழில் இருக்கிறதா என்றால் சிறிது காலம் வாழைக்காய் சிப்ஸ் செய்து வந்தேன். உங்களது தொழில் நிறுவனத்திற்கு பெயர் என்ன என்றால் பெயர் இல்லை. பிருந்தாவன் புட்புரோடஸ் என்ற நிறுவனம் உங்களுடையது என்றால் சரிதான். மேற்படி நிறுவனம் தற்போது இல்லை.

2. அதே போல் காஜிரா நிறுவனம் உங்களுடையது என்றால் சரியல்ல. உங்களுடைய ஆண்டு வருமானம் என்ன என்றால் வியாபாரத்தை பொறுத்து ஆண்டு வருமானம் மாறுபடும். உங்களுடைய ஆண்டு வருமானத்தை சுமாராக சொல்ல முடியுமா என்றால் முடியாது. ஏனெனில் சில சமயங்களில் லாபமும் சில சமயங்களில் நஷ்டமும் வரும். வருமான வரி செலுத்துகிறிர்களா என்றால் பெயருக்காக செலுத்துகிறேன்.

3. 2021 –2022 , 2023 ஆண்டுகளில் என்ன வருமானம் காண்பித்துள்ளீர்கள் என்றால் சிறிய அளவில் பெயருக்காக வருமானத்தை காண்பித்துஇருப்பேன். உண்மையான வருமானத்தை காண்பிக்கவில்லை என்றால் எனக்கு வரவும் இல்லை, செலவும் இல்லை அதனால் காண்பிக்கவில்லை.

4. எதிரியை உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் வாழைக்காய் விற்கபோன இடத்தில் பழக்கம் ஏற்பட்டது. எந்த ஊருக்கு அவ்வாறு வாழைக்காய் வியாபாரம் செய்ய சென்றீர்கள் என்றால் மும்பைக்கு சென்றேன். எதிரி உங்களுக்கு நெருங்கிய நண்பரோ, உறவினரோ கிடையாது என்றால் சரிதான். ரூ10,10,000/– கடன்வாங்கும்அளவிற்கு அப்படி என்ன எதிரிக்கு குடும்ப செலவு இருந்தது என்றால் அத்தியாவசிய கட்டத்தில் இருப்பதால்உதவி பண்ணுங்கள் என எதிரி கூறினார்.

5. என்ன செலவு என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி எந்த தேதியில் கடன் கேட்டார் என்றால் 01.02.2022ல் கேட்டார். நான் 10.02.2022 ல் கடன் கொடுத்தேன். இந்த தொகையை எப்படி தயார் செய்தீர்கள் என்றால் என்னுடைய சிறு வயதிலேயே வாழைக்காய் வியாபாரம் செய்து சிறுகசிறுக சேர்த்து வைத்திருந்தேன். அந்த தொகையை எங்கு

வைத்திருந்தீர்கள் என்றால் என்னுடைய வீட்டில் வைத்திருந்தேன். மேற்படி கையிருப்பு பணத்தை வருமானவரியில் காண்பித்து இருக்கிறீர்களா என்றால் இல்லை.

6. எதிரி மேற்படி கடன் தொகையை 10 மாதத்தில் திருப்ப தந்துவிடுவதாக உங்களிடம் புகார்மனுவில் குறிப்பிட்டுள்ளீர்கள் இது சம்பந்தமாக எழுத்து மூலமான ஆவணம் எதையும் எழுதி கொண்டீர்களா என்றால் இல்லை. வட்டித்தொகையும் எதுவும் நிர்ணயம் செய்தீர்களா என்றால் இல்லை. சிறுகசிறுக சேர்த்து வைத்த பணத்தை வட்டி தொகை இல்லாமலும் எந்தவித ஆவணமும் இல்லாமலும் எதிரிக்கு எப்படி கொடுத்தீர்கள் என்றால் எதிரியின் கஷ்டத்தை தெரிந்துகொண்டு காசோலையை பெற்றுகொண்டு கொடுத்தேன்.

7. உங்களது வழக்கு படி எதிரிக்கு கடன் தொகையை ரொக்கமாக கொடுத்தீர்கள் என்றால் சரிதான். எதிரி கடனாக கேட்ட தொகை எவ்வளவு என்றால் ரூ15,00,000/- கேட்டார் ஆனால் என்னிடம் ரூ10,10,000/-தான் இருந்தது. 10.02.2022 ல் உங்களிடம் ரூ10,10,000/- இருந்தது என்றாலும் , அந்த தொகையை தான் எதிரிக்கு கொடுத்தீர்கள் என்றாலும் சரிதான். 10.02.2022 ல் எதிரி வந்த பிறகு தான் மேற்படி தொகையை கொடுத்தீர்கள் என்றால் எதிரி யதார்த்தமாக எனது வீட்டிற்கு கேட்டிருந்த பணத்திற்காக வந்தார்.

8. என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 முதல் 4 காசோலைகளை நிரப்பியது யார் என்றால் எதிரி நிரப்பியே கொண்டு வந்தார். உங்கள்முன்னிலையில மேற்படி காசோலைகளை எதிரி நிரப்பவில்லை என்றால் சரியல்ல. என் முன்னிலையில் நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்தார்.என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.3,4 ல் பக்கவாட்டில் 05.12.2022 என தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது காசோலை அச்சடிக்கபட்ட தேதி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

9. 05.12.2022 ல் அச்சடிக்கப்பட்ட காசோலைகளை 10.02.2022 ல் எதிரி கொடுத்திருக்க வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. மேற்படி காசோலை வழங்கப்பட்ட கனரா வங்கியில் எதிரி 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தான் கணக்கு ஆரம்பித்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பு.சா.ஆ.3,மற்றும் 4 ல் குறிப்பிடப்பட்டுள்ள 10.02.2022 ல் இந்த காசோலைகள் அச்சடிக்கப்படவில்லை என்றாலும் மேற்படி தேதியில்எதிரிக்கு கனரா வங்கியில் வங்கி கணக்கும் இல்லை என்றாலும் சரியல்ல.

10. என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1,2 ல் பக்கவாட்டில் 24.11.2022 என தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது காசோலை அச்சடிக்கபட்ட தேதி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த காசோலைகளும் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு சுமார் 10 மாதத்திற்கு பின்பு தான் அச்சடிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் பணம் கொடுத்ததாக

சொல்லப்படும் தேதியில் மேற்படி 4 காசோலைகளும் எதிரியின் கைவசத்திலேயே இல்லை என்பதால் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரி மேற்படி காசோலைகளை உங்களிடம் கொடுத்திருக்க வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல.

11. எதிரியிடம் உங்களுக்கு வியாபார பரிவர்த்தனை உண்டா என்றால் வாழைக்காய் வியாபாரம் உண்டு. எந்தெந்த தேதிகளில்எவ்வளவு ரூபாய்களுக்கு வியாபாரம் செய்தீர்கள்என்பது குறித்துஆவணம் ஏதாவது உ்ள்ளதா என்றால் இல்லை. உங்களது வங்கிகணக்கில் எதிரிஏதேனும் பணம் அனுப்பியிருக்கிறாரா என்றால் ஆமாம். எவ்வளவு தொகை அனுப்பியிருக்கிறார் என்றால் தற்போது என்னால் சரியாக சொல்ல இயலாது, ஆனால் சிறுசிறு தொகையை அனுப்பியுள்ளார்.சிறுசிறு தொகை என்பது எவ்வளவு என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பல லட்சம் ரூபாய்களை எதிரிஉங்களுக்கு அனுப்பியிருக்கிறார் என்றால்சரியல்ல.

12. உங்களது வங்கிகணக்கை தாக்கல் செய்ய முடியுமா என்றால் வங்கிகணக்கை நான் முடித்துவிட்டதால் தாக்கல் செய்ய இயலாது. வாழைக்காய் எந்த ஊருக்கு அனுப்பினீர்கள் என்றால் மும்பைக்கு அனுப்பினேன். இதற்கான இன்வாய்ஸ், டெலிவரி சான்று, போன்ற ஆவணங்கள் ஏதேனும்இருக்கிறதா என்றால் இல்லை.05.03.2022 ல் எதிரி உங்களது நிறுவனமாக பிருந்தாவன் புட்பிரோடஸ் வங்கிகணக்கிற்கு ரூ1,00,000/- அனுப்பியிருக்கிறார் என்றால் சரிதான். ஆனால் இந்த தொகையை பக்கத்து கடையிலிருந்து வாங்கி எனக்கு அனுப்பினார். அதே போல் 31.03.2022 ல் உங்களுக்கே ரூ1,00,000/-த்தை எதிரி அனுப்பியிருக்கிறார் என்றால் வாழைக்காய் கொடுத்தவகைக்காக அனுப்பினார்.அதே போல் 31.05.2022 ல் உங்களுக்கே ரூ1,50,000/-த்தை எதிரி அனுப்பியிருக்கிறார் என்றால் சரிதான். ஆனால்இந்த தொகையை பக்கத்து கடையிலிருந்து வாங்கி எனக்கு அனுப்பினார்.

13. 05.08.2022 ல் எதிரி உங்களது நிறுவனமாக பிருந்தாவன் புட்பிரோடஸ் வங்கிகணக்கிற்கு ரூ50,000/- அனுப்பியிருக்கிறார் என்றால் சரிதான். ஆனால் இந்த தொகையை பக்கத்து கடையிலிருந்து வாங்கி எனக்கு அனுப்பினார். 18.08.2022 ல் எதிரி உங்களது நிறுவனமாக பிருந்தாவன் புட்பிரோடஸ் வங்கிகணக்கிற்கு ரூ60,000/- யும் 03.10.2022 ல் ரூ1,00,000/-ம் 18.10.2022 ல் ரூ40,000/-யும் அனுப்பியிருக்கிறார் என்றால் சரிதான். ஆனால் இநத தொகையை வாழைக்காய் வியாபாரம் செய்ததற்காக அனுப்பினார்.

14. 15.09.2022 ல் எதிரி உங்கள் பெயருக்கு ரூ1,00,000/-அனுப்பியிருக்கிறார் என்றால்சரிதான் ,வாழைக்காய் கொடுத்ததற்காக அனுப்பியுள்ளார். பேபி என்பவர் யார் என்றால் எனக்கு தெரியாது. சுமார் ரூ7,00,000/- வரை மேற்படி பேபி என்பவர் வங்கி கணக்கு மூலமாக எதிரியிடமிருந்து பணம் பெற்றுள்ளீர்கள்

என்றால் சரியல்ல. பக்கத்துகடை என சாட்சியம் அளிக்கிறிர்கள் பக்கத்துகடை யார் என்றால் பக்கத்து கடைக்காரர்களின் பெயர் எனக்கு தெரியாது.

15.பக்கத்து கடைக்காரர்களிடமிருந்து எதிரி பணத்தை பெற்று உங்களுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் என்னவென்றால் தூரம் தொலைவாக இருப்பதால் எதிரியிடம் உதவி கேட்டேன், அதனடிப்படையில் வாங்கி அனுப்பினார். பக்கத்துகடைகளுக்கு வாழைக்காய் அனுப்பியது சம்பந்தமாக ஏதேனும் ஆவணம் இருக்கிறதா என்றால் தற்போதைக்கு இல்லை.அந்த ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது.

16. எதிரி உங்களிடமிருந்து வாழைக்காய் வாங்கவில்லை என்றாலும், பிருந்தாவன் புட்பிரோடஸ் நிறுவனத்திலிருந்து சிப்ஸ் வாங்கிய வகையில் வியாபார தொடர்பு மட்டுமே வைத்திருந்தார் என்றாலும் சரியல்ல. சிப்ஸ் வாங்கியதற்காக அவ்வப்போது தொகையை செலுத்திவிட்டார் என்றாலும் மேற்படி வியாபாரதொடர்பு க்காக மேற்படிவழக்கு காசோலைகளை ஜனவரி மாதம்2023ல் எதிரி உங்களிடம் கொடுத்திருந்தார் என்றாலும், இந்த காசோலைகள் எதுவும் பூர்த்தி செய்யப்படாமல் கையொப்பம் மட்டும் போட்டு கொடுத்திருந்தார் என்றாலும் சரியல்ல.

17. அவ்வாறு கொடுக்கப்பட்ட காசோலைகளிலுள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்துஅல்லஎன்றால் சரியல்ல. எதிரியை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக பொய்யான விபரங்களை குறிப்பிட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்சரியல்ல. காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதிகளில் பு.சா.ஆ.3,4 காசோலைகளை வழங்கிய கனரா வங்கியில் எதிரிக்கு வங்கிகணக்கு இல்லைஎன்பதால் எதிரி எந்தகுற்றமும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை.**</u>

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.